Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 296

திங்கட்கிழமை 18 செப்ரெம்பர் 2023

புரட்டாதி 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## நினைவேந்தலைக் குழப்புவதற்கான அரசாங்கத்தின் சதியே தாக்குதல்!!

### வன்மையான கண்டனங்கள் என்கிறார் சரவணபவன்

யாழ்ப்பாணம், செப். 18
தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் தாக்குதல்கள் அரசாங்கத்தினது ஏற்பாட்டிலேயே நடைபெற்றன என்பதையும், பொதுஅமைதியைக் குலைக்கின்றது என்பதைக்காட்டி நினைவேந்தல்களைத் தடுப்பதற்கான அவர்களின் ஏற்பாடு இது என்பதையும் சுட்டிக்காட்டு »11



### பொலிஸார் முன்பாக

# தியாகதீபம் திலீபனின் ஊர்தி மீது சிங்களக் காடையர்கள் தாக்குதல்

### திருகோணமலையில் அடாவடி

**திருகோணமலை, செப்ரெம்பர் 18**

**திருகோணமலையில் தியாகதீபம் திலீபனின் ஊர்தியை வழிமறித்த சிங்களக் காடையர் குழு பொலிஸார் பார்த்து நிற்கத்தக்கதாக அதனை அடித்து நொருக்கியதுடன், ஊர்தியோடு பயணித்தவர்கள் மீதும் கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.** »11

## சிங்களக் காடையர் தாக்குதலுக்கு மாணவர் ஒன்றியங்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 18
தியாகதீபம் திலீபனின் உருவப்படத்தை தாங்கி வந்த ஊர்திப் பவனி மீது திருகோணமலையில் சிங்களக் காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன கண்டனம் தெரிவித்துள்ளன.
'சாதாரண நினைவேந்தலைக்கூட செய்யமுடியாத இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு அரசாங்கம் பொறுப்புக் கூறுவ »11

## பல்கலை மாணவி சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, செப். 18
கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பீட மாணவி ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.
வசந்தகுமார் டிலக்சியா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். »11

## சூழ்ச்சித்திட்டத்தாலேயே ராஜபக்சக்கள் வீழ்ந்தனர்

கொழும்பு, செப். 18
கோத்தாபய ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் எவ்வாறு பதவியில் இருந்து விரட்டப்பட்டனர் என்பது தொடர்பான சூழ்ச்சித் திட்டத்தை அடுத்த ஜனாதிபதி தேர்தலின்போது அம்பலப்படுத்துவோம் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் »11

## இளையோரின் புலம்பெயர்வால் தனித்து விடப்படும் முதியோர்

### ஆய்வில் தகவல்

கொழும்பு, செப். 18
இலங்கையின் எதிர்கால முதியோர் சமூகம் தனித்து வாழவேண்டிய நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கையில் வாழும் 18 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 80 வீதமானவர்கள் மற்றும் 25 முதல் 36 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 70 வீதமானவர்களும் வெளிநாடு »11

## கொடிகாமம் விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 18
துவிச்சக்கரவண்டியில் வீதியைக் கடக்க முயன்ற வயோதிபரை மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த அவர் உயிரிழந்துள்ளார்.
கொடிகாமம், கச்சாய் வீதியில் ஒட்டங்கேணி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது »11

### கொழும்பில் துப்பாக்கிச் சூடு

## தந்தைக்கு வைக்கப்பட்ட இலக்கில் சிக்குண்ட ஆறு வயது மகள் சாவு!


கொழும்பு, செப். 18
மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களின் இலக்கு உயிரிழந்த குழந்தையின் தந்தையே என »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத்துறை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நகைப்புக்குரியன

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



**கொழும்பு, செப். 18**
**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உட்பட இதர சர்வதேச ஸ்தாபனங்களிடத்தில் இலங்கையின் சுகாதாரத்துறையை மையப்படுத்தி புனையப்பட்ட பொய்களும், அந்தப் பொய்களை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டுகளும் நகைப்புக்கு இடமானவை என்று சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் சுகாதாரத்துறையானது நலிவடைந்துள்ளதோடு, பொதுமக்களுக்கான உரிய சேவையை முன்வைக்க முடியாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், சுகாதார அமைச்சும் கட்டமைப்பும் ஊழல்கள் நிறைந்தவையாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது அமர்வில் பங்கேற்றிருந்த சுதந்திர மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யப்பா பண்டார உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தெளிவுபடுத்தியிருந்தார். இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கெஹலிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் சுகாதாரத்துறையானது, மக்களுக்கு சேவை வழங்குவதாகவுள்ளது. அதனால் சுகாதாரத்துறை தொடர்பான விடயங்கள் பொதுமக்கள் மத்தியில் உணர்வு ரீதியாக இலகுவாக பரப்புரை செய்யக்கூடியவையாக உள்ளன. அதனடிப்படையில் வங்குரோத்து அடைந்துள்ள எதிர்க்கட்சிகளும், சில தொழிற்சங்கங்களும், பொய்யான பரப்புரைகளை முன்னெடுப்பதற்காக சுகாதாரத்துறையைக் கையிலெடுத்துள்ளன.

நான் சுகாதாரத்துறையைப் பொறுப்பெடுக்கும்போது 570 மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு காணப்பட்டது. தற்போது அது 60 வரையில் குறைந்துள்ளது.

இந்தநிலையில்தான் எதிரணியினர் ஐ.நா.வுக்குச் சென்று முறைப்பாடுகளை முன்வைத்திருக்கின்றனர். நாட்டின் சுகாதாரத்துறை தொடர்பில் ஐ.நா.வுக்குச் சென்ற செயற்பாடானது நகைப்புக்குரியதாகும் - என்றார். (ம)

# பொதுச் செயலர் பதவியை மீளவும் ஏற்கத் தயாராம்!

## தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, செப். 18
கட்சியிலிருந்து விரட்டியடித்தால்கூட சுதந்திரக் கட்சியை விட்டுச் செல்லப்போவதில்லை. சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி மீள கிடைக்கப்பெறுமானால் அதனை ஏற்பதற்கு தயாராகவே உள்ளேன் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சுதந்திரக் கட்சியின் எனது உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டதுடன் பொதுச் செயலாளர் பதவியும் பறிக்கப்பட்டுள்ளது. கட்சியை விட்டு விரட்டியடித்தால்கூட சுதந்திரக்கட்சியை விட்டுச்செல்லப் போவதில்லை. இதற்கெதிராக நீதிமன்றை நாடியுள்ளேன். கட்சியின் பொதுச் செயலாளர் பதவி மீள கிடைக்கப்பெறுமானால் அதனை நிச்சயம் ஏற்பேன், வழக்கையும் மீளப்பெறுவேன்- என்றார். (ச-44)

# சு.க. பொதுச் செயலர் பதவி கட்சிக்குள் கடும் போட்டி!

கொழும்பு, செப். 18
சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவி வெற்றிடமாகியுள்ள நிலையில், அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கிடையில் கடும் போட்டி நிலவி வருவதாகத் தெரியவருகின்றது.

கட்சியின் சிரேஷ்ட பிரதிச் செயலாளரான முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் செயலாளர் பதவியை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டு, பிரதிச் செயலாளராக இருந்த சரத் ஏக்கநாயக்க பதில் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் அந்தப் பதவியில் பணியாற்றுவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இதனால், செயலாளருக்குரிய பணிகளை முன்னெடுக்க கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற விசேட மத்தியகுழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால நியமிக்கப்பட்டார்.

எனினும், நிரந்தர பொதுச் செயலாளர் நியமனம் இன்னும் இடம்பெறவில்லை. இந்த நிலையிலேயே அந்தப் பதவிக்கு போட்டி ஏற்பட்டுள்ளது. துமிந்த திஸாநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் ஆவார். சரத் ஏக்கநாயக்க கட்சியின் சிரேஷ்ட பிரதிச் செயலாளர் என்பதுடன் இதற்கு முன்னர் கட்சியின் பதில் பொதுச்செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். (ம-44)

# கடலில் வீழ்ந்த மீனவரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 18
பலநாள் மீன்பிடிப் படகில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் நடுக்கடலில் தவறிவீழ்ந்து உயிரிழந்த நிலையில், அவரது சடலம் மீட்கப்பட்டு நேற்று பருத்தித்துறை துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து பலநாள் மீன்பிடிப்படகில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குறித்த மீனவர் புறப்பட்டுள்ளார்.

நடுக்கடலில் பயணித்தபோது அவர் தவறி கடலில் வீழ்ந்த நிலையில், சக மீனவர்களால் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்தே அவரது உடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டது.

மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-100.27)



# யாசகம் பெற்ற ரூ.200,000 ஆலயத்துக்கு அன்பளிப்பு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 18
வயோதிபர் ஒருவர், தான் யாசகமாகப் பெற்ற இரண்டு இலட்சம் ரூபாவை ஆலயத்துக்கு அன்பளிப்புச் செய்த நெகிழ்ச்சிச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் - வண்ணை வேங்கடேஸ் வரா ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் பாலஸ்தாபனம் நிகழ்ந்து, ஆலயமானது புனருத்தாரணம் செய்யப்படவுள்ளது. இந்தப் பணிகளுக்காகவே அந்த யாசகர் தான் யாசகமாகப் பெற்ற 2 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். (ம-27)

# மன்னார் ரயில் நிலையங்களில் ஆசன முன்பதிவு வசதியில்லை

## மக்கள் அசௌகரியம்



மன்னார், செப். 18
கொழும்பு - தலைமன்னாருக்கான புகையிரதசேவை சுமார் 9 மாதங்களின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் மன்னாரிலுள்ள ரயில் நிலையங்களில் ஆசன முன்பதிவு செய்யக்கூடிய வசதிகள் காணப்படாமையால் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
பல்வேறு தரப்பினரின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்கு அமைய கொழும்பு- தலைமன்னார் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலாம் வகுப்பு, குளிரூட்டப்பட்ட ஆசன முன்பதிவு மற்றும் 2ஆம் வகுப்பு ஆசன முன்பதிவுகள் மேற்கொண்டு மன்னார் மாவட்டத்திலிருந்து மக்கள் பயணங்களைத் தொடர முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து தலைமன்னாருக்கு ஆசன முன்பதிவுகளை மேற்கொண்டு மக்கள் பயணங்களை மேற்கொள்ள முடிகிறது. ஆனால், தலைமன்னார் தொடக்கம் மடு வரையிலான புகையிரத நிலையங்களில் ஆசன முன்பதிவு செய்யக்கூடிய வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. மன்னாரிலுள்ள பிரதான ரயில் நிலையங்களில் காணப்பட்ட கணினி வசதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளமையாலேயே குறித்த முன்பதிவுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக மன்னாரிலிருந்து பயணங்களை மேற்கொள்ளும் மக்கள் சாதாரண பயணச் சீட்டுகளைப் பெற்றே அசௌகரியங்களுக்கு மத்தியில் தமது பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது.

எனவே மன்னாரை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்- என்றனர். (ச-27.56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழர் விடயத்தில்

# முதல்நிலை நடுநிலையாளராக செயற்படவேண்டும் இந்தியா!

### சிறீதரன் எம்.பி கோரிக்கை

**முல்லைத்தீவு, செப். 18**

**ஈழத்தமிழர்களின் விடயத்தில் எப்போதும் முதல்நிலை நடுநிலையாளராக இந்தியா செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.**

அக்கராயனில் அண்மையில் இடம்பெற்ற திலீபனின் 36ஆவது அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எப்பொழுதும் இந்தியாவே எங்களை பாதுகாக்க வேண்டும் என்பதும், இந்தியாவின் கேந்திர நலனைப் பாதுகாக்கவேண்டியது ஈழத்தமிழர் தேசமே என்பதும் ஏற்கனவே உணரப்பட்ட உண்மை. எனவே ஒருவருக்கொருவர் இணைந்து செயற்பட வேண்டிய தருணத்தில் இன்று இந்தியாவும் ஈழதேசமும் இருக்கிறது. கடந்த 36 ஆண்டுகளுக்கு முன் திலீபனால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகள் இன்று வரையும் நிறைவேற்றப்படாமலேயே இருக்கிறது. தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக முன்வைக்கப்பட்ட சாதாரண கோரிக்கைகள்கூட 36 ஆண்டுகளைக் கடந்தும் நிறைவேற்றப்படாத நிலையே இந்தநாட்டில் இன்னமும் தொடர்கிறது.

ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால இனப்பிரச்சினை தொடர்பில் இந்திராகாந்தி கொண்டிருந்த கரிசனை பின்வந்த நாள்களில் கூருணர்வு அற்ற சில இராஜதந்திரிகளின் செயல்களால் இந்திய வகிபாகத்தில் பின்னடைவுகளை ஏற்படுத்தியது. அதன் விளைவாகவே முள்ளிவாய்க்கால் வரையிலான மிகமோசமான இனப்படுகொலை வரையும் இரத்தமும் சதையுமாக எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் நடைபெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அன்றே சரியான திசையில் சிந்தித்து இந்தியாவின் பாதுகாப்புக்கு ஈழதேசம் அவசியமென்பதை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்திருந்தால் இன்று சீன தேசத்தால் ஏற்படுகின்ற நெருக்கடிகளின் விளைவுகள் அதே சிந்தனைப் போக்கை கிளர்த்தியிருக்கும் தேவைப்பாடு எழுந்திருக்காது.

அத்தகைய காலச்சூழல்களைக் கருதி, இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் 36 ஆண்டுகளுக்கு முன்விட்ட தவறுகளைப் புரிந்து கொண்டு ஈழ தேசத்தைப் பாதுகாக்கவும் அதனூடாக தென்கோடியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு நட்புமிக்க சக்தியாக ஈழத் தமிழரது தாயகத்தை உருவாக்கவும் தயாராகவேண்டும். அதற்கான முதல் நிலை நடுநிலையாளராக இந்தியா தன்னை உருவாக்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (ம-113)

## பொலிஸாருக்கு மிரட்டல் பேருந்துச் சாரதி கைது!

### மந்திகையில் சம்பவம்

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு கொலைமிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட தனியார் பேருந்து சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மந்திகை சந்தியில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பருத்திதுறையில் இருந்து மல்லாவி நோக்கிச் சென்ற தனியார் பேருந்தை, வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மறித்து வீதி ஒழுங்குகளை முறைப்படி பின்பற்றிச் செல்லுமாறு அறிவுறுத்தினர்.

அதன்போது பேருந்தின் சாரதி, பொலிஸாருக்கு கொலைமிரட்டல் விடுத்து பேருந்தை எடுத்துச் சென்றுள்ளார். அதனையடுத்து மீண்டும் பேருந்து பருத்தித்துறை நோக்கி வந்தபோது பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டார்.

விசாரணையில் பேருந்து வழித்தட அனுமதிப்பத்திரமின்றிப் பயணித்தமை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் காலாவதியானமை ஆகியவையும் தெரியவந்தது. சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்றுமுன்தினம் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-100)

## லான்சா, பொன்சேகா, சம்பிக்க சந்திப்பு

அநுர யாப்பா, நிமல் லான்சா அணியினருக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் சரத் பொன்சேகா மற்றும் குடியரசுக் கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

அடுத்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களை மையப்படுத்தியதாகவே இந்தச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது எனத் தெரியவருகின்றது. (ம-44)

### சிறுமியின் கை அகற்றம்

# வார இறுதிக்குள் அறிக்கை; பாரபட்சமின்றி நடவடிக்கை

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

யாழ்ப்பாண சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் அடுத்தவார இறுதிக்குள் முழுமையான அறிக்கை எனக்குக் கிடைக்கும். அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் - இவ்வாறு சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சிறுமியின் கை மணிக்கட்டுக்கீழ் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சின் நடவடிக்கைகள் பற்றி வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் இடது கையில் மருந்து ஏற்றுவதற்காக பொருத்தப்பட்ட கனூலா காரணமாக ஏற்பட்ட தாக்கத்தால் அவரது கை மணிக்கட்டுக்குக்கீழ் அகற்றப்பட்டுள்ளது. இது துரதிர்ஷ்டவசமான நிகழ்வாகும்.

எனது பணிப்புரையின் பேரில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு ஊடாக விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த வாரத்துக்குள் அந்த விசாரணைகள் பற்றிய முழுமையான அறிக்கை எனக்குக் கிடைக்கவுள்ளது. அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக் [illegible] என்றார். (ஏ-இ)




**சி**ங்களக் குடியேற்றங்களை தமிழரிண்ட பூர்வீக நிலங்களில அனுமதிச்சால் என்ன நடக்குமெண்டதுக்கு நல்ல உதாரணம் நேற்று திருகோணமலையில திலீபன்ர ஊர்தியை அடிச்சு உடைச்ச சம்பவம். அந்தச் சம்பவ வீடியோவைப் பார்த்தால் ஒரு விசயம் நல்லாத் தெரியும். துவேசம் பிடிச்ச நாலைஞ்சு சிங்களவர் தான் உவ்வளவு அலப்பறை செய்தவை. ஊர்தியோட நூற்றுக்கணக்கான ஆக்கள் போயிருந்தால், அந்த நாலைஞ்சு பேரும் எட்ட நிண்டு வேடிக்கை பார்த்திட்டு, மிஞ்சிப் போனால் ஏதும் கோசம் போட்டு, கல்லை எறிஞ்சிட்டு ஓடியிருப்பினம். மற்றப்படி இப்பிடி சிங்கக்கொடி போட்ட தடியால, துணிஞ்சு வந்து அடிச்சிருக்க மாட்டாங்கள்.

இதேபாதையாலதான் கொஞ்சக்காலத்துக்கு முதல் 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' பேரணி வந்தது. அந்தப் பேரணி அரசியல் கலப்பில்லாததால ஆயிரக்கணக்கான ஆக்களோட கடும் எழுச்சியா வந்தது. அப்ப கோத்தாவின்ர ஆட்சி வேற. போதாக்குறைக்கு கொரோனாக் கெடுபிடியள். எல்லாத்தையும் தாண்டி ஆயிரக்கணக்கானோரோட அந்தப் பேரணி வந்ததால, அரசாங்கத்தாலையும் ஒண்டும் செய்ய முடியேலை. இப்பிடியான சிங்களக் காடையராலையும் ஒண்டும் செய்யேலாமல் போட்டுது. சின்னச் சின்ன பிரச்சினை குடுத்தாலும் அதையெல்லாம் 'ஆள்பலம்' எண்ட விசயத்தால வெண்டுகொண்டு அந்தப் பேரணி வெற்றிகரமா முடிஞ்சது.

சரி, பிழை எண்டதுக்கு அப்பால தியாக தீபம் திலீபன்ர பேரோட இந்தப் பேரணி வந்தாலும், இது முன்னணிக்காரர் மட்டுமே ஏற்பாடு செய்த ஊர்தி. அதால அவையின்ர கட்சியாக்கள் மட்டும் தான் வருவினம். திஸ்ஸவிகாரைக்கு எதிரா நாலைஞ்சு பேரோட போராடுறமாதிரி இந்த ஊர்தி விசயத்தில வீரம் காட்ட ஏலாது. ஏனென்டால் சிங்களக் குடியேற்றமுள்ள இடங்களுக்குள்ளால வரேக்க, இப்பிடி நாலைஞ்சு பேரோட வரேக்க சிக்கல் வந்தால், திரும்பித்தான் ஓட வேண்டியிருக்கும். அது அந்தக் கட்சிக்கு மட்டுமல்ல, திலீபன்ர தியாகத்துக்கும் ஒரு அவமானம் தான். அதால இதை ஒரு பாடமா முன்னணி எடுத்துக்கொண்டு, இனிமேல் இப்பிடியான பொது விசயங்களுக்கு கட்சி சார்பில்லாமல் எல்லாரையும் சேர்த்து, அடம்பன் கொடி மாதிரி திரண்டு போகவேணும். 'இல்லை நாங்கள் தனி வழியிலதான் போவம்' எண்டு இனியும் அந்தக் கட்சி அடம்பிடிக்குமெண்டால், 'அப்ப எல்லாமே அரசியல் ஆதாயத்துக்குத்தான் செய்யினம்- எண்டுதான் சனம் நினைக்கும்.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரப்பந்தாட்ட திடல் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 18

ஊரெழு கணேச வித்தியா சாலையில் அமரர் திருமதி நடராஜா ஞாபகார்த்த கரப் பந்தாட்ட திடல் திறப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் இரா.ஜெயகுமார் தலைமையில் இடம்பெறவுள் ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக திருமதி மகேஸ்வரி நடேச பிள்ளை, யாழ்.கல்வி வலய தகவல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் திருமதி வனிதா நவரட்ணம் ஆகியோர் பங் கேற்கவுள்ளனர். (ச)

## மீனவர்களே அவதானம்!

கொழும்பு, செப். 18

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் மணித்தியா லத்துக்கு 55 கிலோமீற்றர் வரையில் பலமான காற்று வீசக்கூடும் என்று வளிமண் டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ள தாவது:-

கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் பல இடங்களிலும் அத்து டன் பொலநறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களின் பல இடங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல் லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

சிலாபம் தொடக்கம் மன் னார் ஊடாக காங்கேசன் துறை வரையான மற்றும் அம்பாந்தோட்டை தொடக் கம் பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50-55 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும். இவ் வாறான சந்தர்ப்பங்களில் கடற்பிராந்தியங்கள் கொந் தளிப்பாகக் காணப்படும் - என்றுள்ளது. (ம)



### அக்கரைப்பற்றில் முஸ்லிம்கள் இணைந்து

# திலீபனின் ஊர்திப்பவனியை இடைமறித்துப் போராட்டம்!

மட்டக்களப்பு, செப். 18

தியாகதீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தலை முன்னிட்டு பொத்துவிலில் இருந்து யாழ்ப்பா ணம் நோக்கி இடம்பெற்றுவரும் ஊர்திப் பவனியை, முஸ்லிம்கள் சிலர் இணைந்து அக்கரைப்பற் றில் இடைமறித்து நேற்றுமுன் தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை ஊடாக அக்கரைப் பற்று நோக்கி ஊர்திப் பவனி ஆரம்பித்தபோது, அக்கரைப் பற்று ஆதார மருத்துவமனைக்கு முன்பாக நின்ற சிறுகுழுவினர் வாகனத்தை மறித்து குழப்பம் விளைவித்துள்ளனர். இலங்கை யின் தேசியக் கொடிகளை ஏந்தி அவர்கள் போராட்டத்திலும் ஈடுபட் டனர். எனினும் பெருமளவான முஸ்லிம்கள் ஊர்தியை வரவேற்ற துடன் மலர்தூவி அஞ்சலியையும் செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் ஏற்பாட்டில் இந்த ஊர்திப் பவனி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)



இலங்கைக்கு வருகை தந்திருந்த தென் னிந்தியாவின் பிரபல நடிகரும், திரைப் பட இயக்குநருமான பிரபுதேவா, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை நேற்றுமுன் தினம் அலரிமாளிகையில் சந்தித்துக் கலந் துரையாடியுள்ளார். புதிய திரைப்படமொன் றின் பாடல் ஒன்றின் ஒளிப்பதிவுக்காக பிரபுதேவா இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டுள்ளார். (ச-இ)



## தேசியமட்ட கோலூன்றிப் பாய்தல் விக்ரோறியா மாணவிக்கு வெள்ளி

யாழ்ப்பாணம், செப். 18

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவி ரமேஸ்குமார் தனுசாலினி வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

18 வயதுக்குட்பட்ட பிரிவிலேயே அவர் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

## பொலிஸாருக்கு இடையூறு ஆவரங்கால்வாசி கைது!

யாழ்ப்பாணம், செப். 18

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்பத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் - ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த குறித்த நபருக்கு எதிராகப் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப் பட்டது. முறைப்பாட்டுக்கமைய விசாரணை செய்ய பருத்தித்துறைப் பொலிஸார் குறித்த நபருக்கு அழைப்பு விடுத்தபோதும் அவர் பொலிஸ் நிலையம் செல்லவில்லை.

கடந்த வியாழக்கிழமை குறித்த நபரைக் கைதுசெய் வதற்கு பருத்தித்துறைப் பொலிஸார் ஆவரங் காலுக்கு விரைந்தனர். அங்கு குறித்த நபர் பொலி ஸாருடன் முரண்பட்டு பொலிஸ் வாகனத்தில் ஏற மறுத்து பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளை வித்தார். அதனையடுத்து அச்சுவேலி பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர் கைதுசெய்யப்பட்டு பருத் தித்துறை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். சம் பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-26)

## சங்கரத்தையில் விபத்து: மூவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் - சங்கரத்தைப் பகுதியில் அண்மை யில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த பட்டா ரக வாகனம் இ. போ.ச. பேருந்துடன் இலேசாக மோதுண்டு பின் னர் வீதியின் ஓரமாக நின்றவர்களை மோதித்தள்ளிய திலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. காயமடைந் தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-125)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெ டுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக் கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூல மாக முடியும். முயற்சிகளை தவிர்க்கவும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூல மான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடி யும். செலவுகளைச் சமாளித்துவிடுவீர்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர் களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படு வீர்கள்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சங்க டங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை யைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக் கிடையே அந்நியோன்னியம் அதிகரிக் கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமா ளித்து விடுவீர்கள். காரியங்களில் அனு கூலம் உண்டாகும். புதிய முயற்சி களைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடு படவேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பொறு மையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். மன வருத்தம் நீங்கி அந்நியோன்னியம் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூல மான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். செலவுகள் அதிகரித்தா லும் சமாளித்துவிட முடியும். பிரச்சி னைகள் நீங்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிரச்சினைகள் ஏற்படும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும். வழிபாடு நலம் சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காலப்பொருத்தமான அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இனிவரும் காலங்களில் மலையக மக்களின் பிரச்சினைகளும் பேசப்படும் என்று வெளிப்படையாக அறிவித்திருக்கின்றார் அதன் இலங்கைக்கான பிரதிநிதி மார்க் அந்தரே. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான மனோ கணேசன் குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே இந்த அறிவிப்பை – வாக்குறுதியை வழங்கியிருக்கின்றார் அந்தரே. இலங்கையில் பிரச்சினைகளை ஓயாது எதிர்கொள்ளும் இனக்குழுமங்களில் மலையகத் தமிழினமும் ஒன்றே. இத்தகைய சூழமைவில் ஐ.நா. பிரதிநிதியின் அறிவிப்பு காலப்பொருத்தமானதாகவும், கனதியானதாகவும் உள்ளது.

சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரைக்கும் இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசம்தான். ஈழத் தமிழர்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளைப் போன்று மலையக மக்களும் இந்தத் தீவில் இருநூறாண்டுகளுக்கும் மேலாக வஞ்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இனப்படுகொலைகளுக்குப் பதிலாக அவர்கள் மீது 'பொருளாதாரப் படுகொலைகள்' அரசாங்கத்தாலும், அரசாங்க ஆதரவுபெற்ற 'கொம்பனிகளாலும்' ஏவப்பட்டன – ஏவப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஈழத்தமிழர்களுக்கும் மலையத் தமிழர்களுக்கும் இடையிலான வேறுபாடு அவ்வளவே. மற்றும்படி இரு இனக்குழுக்களும் ஆலைவாய்க் கரும்பாக நெரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதே 'பொதுமைப்பாடு'.

'ஓர் உழைப்பாளியின் வியர்வை உலர்ந்துபோவதற்குள் அவனுக்கான ஊதியத்தை வழங்கிவிட வேண்டும்;' என்கின்றது விவிலியம். விவிலியம் மட்டுமல்ல உலகிலுள்ள அநேகமான மறைநூல்களும் அறநூல்களும் இதைத்தான் பறைசாற்றுகின்றன. ஆனால், இந்தச் சித்தாந்தத்துக்கும் மலையக மக்களின் வாழ்வியலுக்கும் கிஞ்சித்தும் பொருத்தமில்லை. ஆயிரம் ரூபா ஊதியத்தை வழங்குமாறு நெடுங்காலமாக மலையக மக்கள் (தோட்டத் தொழிலாளர்கள்) போராடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் கோரிக்கை இன்னமும் செவிசாய்க்கப்பட்டதாகவில்லை. 2020களில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதிருந்த பொருளாதார இயலுமையில் நாடு இப்போதில்லை. விலையேற்றங்கள் இடியாக இறங்கிக்கொண்டிருக்கையில், மூன்றாண்டுகளுக்கு முற்பட்ட ஆயிரம் ரூபா ஊதியக்கோரிக்கைகூட இன்னமும் மெய்ப்பட்டபாடில்லை.

ஊதியம் மட்டுமல்ல. உட்கட்டுமானங்களிலும் மலையக மக்களின் வாழ்வு சங்கடங்கள் நிறைந்ததாகவே அமைந்திருக்கின்றது. லயங்கள் என்று சொல்லப்படக் கூடிய 'பிரிட்டிஷார்' கால குடில்களில்தான் இன்னும் பல்லாயிரம் தோட்டத்தொழிலாளர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். தனி நிலம், வீடு, கழிப்பறை, கிணறு இவையெல்லாம் இன்றளவும் அவர்களின் கனவுகளே. ஓர் இனக்குழுமம் இருநூறு ஆண்டுகளாக வாழும்இடத்தில் – பிரதேசத்தில் நாட்டில் இவையெல்லாம் புறக்கணிக்கப்படுவது எவ்வளவு பெரிய அபத்தம்.


தோட்டத்தொழிலாளர்களாக இருக்கட்டும் இதர மலையகத் தமிழர்களாக இருக்கட்டும் அவர்களும் இந்த நாட்டு மக்களே. அனைத்துவித உரிமைகளுடனும், ஜனநாயக அம்சங்களுடனும் நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கு அவர்கள் உரித்துடையவர்கள். சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் கோரமுகத்தை அறிந்த – அதன் நெருக்குவாரத்தை உணர்ந்த ஈழத்தமிழர்கள் தங்கள் குரல்களை மலையக மக்களுக்காகவும் உயர்த்த வேண்டும். இன்று தமிழர் தாயகத்தின் எல்லைக்கிராமங்கள் பலவற்றின் இருப்பு மலையக மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. சிங்களப் பேரினவாதத்தின் நில ஆக்கிரமிப்பை எதிர்க்கும் முன்களச் செயற்பாட்டாளர்களாக இன்று மலையக மக்கள் மாறிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், அவர்களின் பிரச்சினைகளை எங்களின் பிரச்சினைகளாக நோக்கவேண்டியது ஒரு வகையில் கட்டாயக் கடமையுமாகின்றது.

மலையக மக்களின் குருதியை அட்டைகள் மட்டும் உறிஞ்சவில்லை. இந்தக் கருத்தியல் ஐ.நா.வில் ஏற்கனவே எதிரொலித்திருக்கவேண்டும், இப்போதே தாமதம்தான். இனியாவது விரைந்து செயலாற்றட்டும்.

### நாளொரு நல்வார்த்தை

நீங்கள் ஒரு மேதையாகவோ தொலைநோக்கு சிந்தனையாளர் ஆகவோ இருக்கத் தேவையில்லை. ஒரு நல்ல திட்டமும், அது வெல்லும் என்ற கனவும் மட்டுமே போதும்.

- மைக்கல் டெல் -




ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

# புதிய விசாரணையை நடத்துக வலியுறுத்துகின்றது அமெ.

கொழும்பு, செப். 18

**இலங்கையில் நடந்த ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமான புதிய விசாரணைகளை நடத்துமாறு அமெரிக்காவின் எப்.பி.ஐ. நிறுவனம் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.**

'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல்களில் ராஜபக்சக்களுக்கு நெருங்கிய தொடர்புண்டு என்று நம்பப்படும் நிலையில், இந்தக் கோரிக்கையை எப்.பி.ஐ. நிறுவனம் விடுத்துள்ளது. எனினும், இதற்கு முன்னர் இந்தத் தாக்குதல் சம்பந்தமாக விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதால், மீண்டும் அப்படியான விசாரணை நடத்தத் தேவையில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

'ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஆகியவற்றின் மூலம் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதால், மீண்டும் விசாரணைகளை நடத்தும் தேவை ஏற்படவில்லை என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு' என அலி சப்ரி எப்.பி.ஐ. நிறுவனத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார். (ம)

## அமெரிக்காவுக்கு செல்கிறார் அநுர

கொழும்பு, செப். 18

ஜே.வி.பி.யின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

ஒக்ரோபர் 28ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதி வரை இந்தப்பயணம் அமையவுள்ளது எனத் தெரியவருகின்றது.

அமெரிக்காவில் வாழும் இலங்கையர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டங்களில் பங்கேற்று அநுர உரையாற்றவுள்ளார். (ம-44)

## தேயிலை விளைச்சல் இந்தாண்டில் உயர்வு

கொழும்பு, செப். 18

தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு உயர்வடைந்துள்ளது. அதற்கமைய இந்த ஆண்டில் சுமார் 270 மில்லியன் கிலோ தேயிலை விளைச்சல் எதிர்பார்க்கப்படுகிறது என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக தேயிலை விளைச்சல் பெருமளவு வீழ்ச்சியடைந்தது. ஆனால், இந்த ஆண்டு விளைச்சல் அதிகரித்துள்ளது. தேயிலை உற்பத்தியைப் பொறுத்தவரையில் கடந்த 2013ஆம் ஆண்டே அதிகளவான விளைச்சல் பெறப்பட்டது. அந்த ஆண்டில் 340 மில்லியன் கிலோ தேயிலை அறுவடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**நாளை** 19.09.2023 செவ்வாய்க்கிழமை புரட்டாதி 02

சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவேந்தல்

படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், நலன்புரி சங்கத்தின் ஸ்தாபகருமான அமரர் மாமனிதர் சி.சிவமகாராசாவின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தலைவர் ந.உமாகரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.கைலைநாதன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் கடந்த 2022 ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கீரிமலையைச் சேர்ந்த பணியாளர் ஒருவரின் மகளுக்கு கல்வி ஊக்குவிப்பு உதவியும் வழங்கப்பட்டது. தொடர்ந்து வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சு.சுதர்ஜன் கலந்துகொண்டு நினைவுப் பேருரை ஆற்றினார்.

(ய-66)



குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

(ய-66)



மன்னார் - நானாட்டான் ஸ்ரீசெல்வமுத்துமாரியம்மன் ஆலயத்தின் மஹோற்சவத்தின் மஞ்சத் திருவிழாவும் 15 இலட்சம் பெறுமதியான மஞ்சத்தினை ஆலயத்துக்கு இலவசமாக உருவாக்கிக் கொடுத்த மூன்று ஆசாரியார்களை மதிப்பளிக்கும் நிகழ்வும் கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. மன்னார் மாவட்ட சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய தர்மராஜா வினோதன் ஆசாரியார்களுக்கு பொன்னாடைகளை போர்த்தி மதிப்பளித்தார்.

(ய-213)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் விசேட நிகழ்வுகள் வரிசையில் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. சைவப்புலவர் க.கைலைநாதன் கலந்துகொண்டு 'ஞானக் குழந்தை' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

(ய-66)





இணுவில் இளைஞர்களின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக் கொடை முகாமும் தொற்றா நோய்கள் தொடர்பான இலவச மருத்துவ முகாமும் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெற்றது.
இணுவிலைச் சேர்ந்த காலமான கி.சிந்துஜன், ச.யதுசன், யோ.சதீஸ், செ.ரிஷாந் ஆகிய இளைஞர்களின் நினைவாகவே குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ய-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணில்
29.12.1946

விண்ணில்
04.09.2023

கடந்த (04.09.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்த
அமரர்
## சங்கரப்பிள்ளை சொர்ணலிங்கம்
### கலாபூசணம் தவில் வித்துவான்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.09.2023) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் 20.09.2023 புதன்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

✻ இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

காளிகோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்
077 444 8781

CS 52122) (N.1)


A/L Chemistry Tamil / English
தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.
T.பரபரன் B.Sc, (Cey) (R.u)
M.Sc. (Cey) Chemisty (Srijayawardena pura)
076 410 5838

The Royal College of Jaffna
O/L, A/L பாடங்களில் "A" சித்திபெற
சிறு குழுக்களாக வணிகம், கணக்கீடு,
I.C.T ஆங்கில வகுப்புகள்.
KUBERAN BUILDING, CHANKANAI.
Tel: 077 675 1649


# உடுக்கியவளை பிள்ளையாருக்கு ஆவணி சதுர்த்தி உற்சவம்

வட்டுக்கோட்டை, செப். 18

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மஹா கணபதிப்பிள்ளையார் திருக்கோவில் ஆவணி சதுர்த்தி உற்சவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு விசேட கும்ப பூஜையுடன் ஆரம்பமாகவுள்ளது.

சதுர்த்தி உற்சவம் நிறைவடைந்ததுடன் ஆலயத்துக்கென புதிதாக அமைக்கப்பெற்ற தீர்த்தக் கேணி சிறப்பு அபிஷேகத்துடனும் பொங்கலுடனும் மாலை 4.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை ஆலய தர்மகர்த்தாவும் பரிபாலன சபையினரும் அறியத்தருகின்றனர். (ஓ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 10 . 1977



மறைவு
10 . 09 . 2023

## தங்கராஜா விஜயபாஸ்கர்

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Basel ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா விஜயபாஸ்கர் கடந்த (10.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராஜா மற்றும் கஸ்தூரி தம்பதியரின் அன்பு மகனும். ஷகிலா அவர்களின் அன்புக் கணவரும். சுஜீபன் அவர்களின் அன்புத் தந்தையும். வாசுதேவன். ஷைலந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும். மதுரா. பிருந்தாவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும். நவனிஷ். லோகீத் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும். வைஷ்ணவி. வருண் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2023) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் Friedhof am Hornli, Hornliallee 70,4125 Riehen, Switzerland இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


12/44, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
077 669 1309 (மாமா)
076 545 1885 (சித்தி)

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 52134) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 11 . 1931



மறைவு
09 . 09 . 2023

## திரு.சின்னத்துரை நவரத்தினம் (பிரான்ஸ்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், 306, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் மற்றும் 31/1, சங்கிலியன் வீதி, (திருவேரகம்) நல்லூரை வாழ்விடமாகவும், 04 Rue Rabelais 93120 La Courneuve யை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நவரத்தினம் கடந்த (09.09.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நவரத்தினம் தவமணியின் அருமைக் கணவரும், நந்தகுமார் (வரன்), ஜெயகுமார் (ஜெயன்), அமிர்தினி (உமா), நந்தினி (உஷா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌசலா, குமுதினி (பாமா), சுந்தரராஜா (குஞ்சன்) தர்மகுலசிங்கம் (தம்பி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - இராசலட்சுமி, அமிர்தலிங்கம் - புவனேஸ்வரி, தவபாலசிங்கம் - கணேஸ்வரி, பஞ்சலிங்கம் - கனகேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், பத்மாவதி - லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகாம்பிகை - காலஞ்சென்றவர்களான நல்லையா, தவராசா மற்றும், பவளம்மா, செல்வராணி, சிவயோகநாதன், செல்வரத்தினம் - சிவசோதி, செல்வராசா, அனுசியா, சிறிமுருகராசா - ஸ்ரீதேவி ஆகியோரின் மைத்துனரும், நிருஷன், நிரோகா, ஜெலானி, ஜெயமினி, ஜெரான் ஆகியோரின் ஆருயிர் அப்பப்பாவும், அமிர்ராஜ் (மது), அம்யுக்தன் (சனு), ஆர்த்திகா, அகிலன், அனோஜன், அம்ரிதா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிரியை 20.09.2023 புதன் 10 - 12.30 வரை 16 Rue Jean Allemagne 93430 Villetaneuse நடைபெற்று, பின்னர் 13.00 - 14.00 95 rue Marcel Sembat 93430 Villetaneuse எனும் முகவரியில் தகனம்செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:


| | | | |
|---|---|---|---|
| நந்தகுமார் | Varan | (மகன்) | 0044 7405 879351 |
| ஜெயகுமார் | Jeyan | (மகன்) | 0033 6121 59240 |
| சுந்தரராஜா | Kunjan | (மருமகன்) | 0044 7962 118118 |
| தர்மகுலசிங்கம் | Tha ıbi | (மருமகன்) | 0033 6139 05162 |
| மகேஸ்வரி | | (தங்கை ) | 077 719 5944 |
| கார்த்தியன் | | (மருமகன்) | 077 150 0611 |

தகவல்:
மகன் - ஜெயகுமார்
(ஜெயன் பிரான்ஸ்)

(cs 52135) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 11 . 1938



மறைவு
10 . 09 . 2023

## நல்லசேகரம்பிள்ளை கஜமுகன் (சிவபாதம்)

ஏழாலை கிழக்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கணக்கணார் கண்டி காரைநகரை வசிப்பிடமாகவும் மூளாய் கிழக்கு மூளாயில் தற்காலிகமாக வசித்தவரும், தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நல்லசேகரம்பிள்ளை கஜமுகன் (சிவபாதம்) கடந்த 10.09.2023 லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லசேகரம்பிள்ளை தங்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற முருகேசு பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் (காரைநகர் வீதி, கணக்கணார் கண்டி), காலஞ்சென்ற சரஸ்வதி (நெசவு ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (ஓதுவார்), காலஞ்சென்ற கார்த்திகேயன் (கணக்காய்வாளர்) ஆகியோரின் சகோதரனும், வேல்வேந்தன் (பொறியியலாளர் - லண்டன்), வாசுகி - லண்டன் ( காரைநகர் ஊரி - அ.மி.த.க. பாடசாலை முன்னாள் ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானகௌரி (லண்டன்), திருக்குமார் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவகுகன், வாகீசன், கஜானனன், பவித்திரா, அபர்ணா, அபிராமி, குருபரன் (லண்டன்) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு Tilgate Community Centre, Shackieton Road, Crawley Rh107DH லண்டனில் நடைபெறும்.

இலங்கை நேரப்படி (1.30 பிற்பகல்)

ந.பாலசுப்பிரமணியம்
077 267 7503
க.வேல்வேந்தன்
0044 7727 064 279 - (லண்டன்)
வாசுகி
0044 7581 796 430 - (லண்டன்)

தகவல்:
குடும்பத்தினர்

(cs 52121) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக் கப்பலின் வருகை

# வெளிவிவகார அமைச்சிடம் இறுதித் தீர்மான அதிகாரம்

**கொழும்பு, செப். 18**

**சீனாவின் ஷியான்-6 கப்பலின் வருகைக்கான அனுமதி உள்ளிட்ட விடயங்களை வெளிவிவகார அமைச்சே தீர்மானிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு, இது தொடர்பில் தன் பரிந்துரைகளையும் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளது.**

சீனாவுக்குச் சொந்தமான ஷியான்-6 கப்பல் எதிர்வரும் மாதம் 25ஆம் திகதி இலங்கைக்கு வருவதற்குத் திட்டமிட்டுள்ளது. இதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு முன்னதாக அறிவித்தது. எனினும், இந்த அறிவிப்பு வந்து சில நாள்களிலேயே அதை மறுத்த வெளிவிவகார அமைச்சு, கப்பலின் வருகைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இந்த விடயம் இன்னமும் பரிசீலிப்பு நிலையிலேயே இருக்கின்றது என்று தெரிவித்தது. இராஜதந்திர ரீதியில் இந்தியா வழங்கிய அழுத்தம் இலங்கையின் இந்த மாற்றத்துக்குக் காரணம் என்று கருதப்பட்ட நிலையில், சீனக் கப்பல் தொடர்பான இறுதிமுடிவெடுக்கும் அதிகாரம் இப்போது வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குரிய அந்தக் கப்பல் தென்சீனக் கடலிலிருந்து இந்து சமுத்திர பிராந்தியத்தை அண்மித்ததாக, மலேஷியாவை நோக்கி தற்போது பயணித்துக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## உள்நாட்டில் நடப்பனவற்றை வெளியூடகம் திரையிடுகிறது

### சர்வதேச விசாரணையே தீர்வு. ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

உள்நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை வெளிநாட்டு ஊடகங்கள் சொல்கின்றன. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் உள்ளக விசாரணையின் பலவீனத்தை இது எடுத்துக்காட்டுகிறது. எனவே வெளிப்படைத்தன்மையாக சர்வதேச விசாரணை மூலம் இதற்கு விடைகாண வேண்டும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு விடைகாணப்பட வேண்டும். அதற்கு வெளிப்படைத்தன்மை அவசியம். உள்நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை வெளிநாட்டு ஊடகம் சொல்லும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. உள்ளக விசாரணைமூலம் விடை கண்டிருந்தால் பிரச்சினை அத்துடன் முடிவடைந்திருக்கும். எனவே சர்வதேச விசாரணையே இதற்குத் தீர்வாகும். அப்போது குற்றவாளிகள் வெளிச்சத்துக்கு வருவார்கள். பிரச்சினையை இவ்வாறே வைத்திருந்தால்தான் அது குறித்து விமர்சனங்கள் எழுந்த வண்ணமேயிருக்கும் - என்றார். (ச-44)

## 17 தமிழக மீனவர்கள் கைது இராமேஸ்வரத்தில் போராட்டம்!

சென்னை, செப். 18

இலங்கையில் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி, இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துமீறிய மீன்பிடிக்காக 17 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே மீனவர்களின் கைதைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-இ)

## அரச நிறுவனங்களில் சைபர் தாக்குதல்கள்!

### குற்றப்புலனாய்வு விசாரணை ஆரம்பம்




கொழும்பு, செப். 18

அரச நிறுவனங்களின் மின்னஞ்சல் முகவரிகள் மீதான இணையத் தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பதிலமைச்சர் கனக ஹேரத் விடுத்த அறிவித்தலுக்கமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவை அலுவலகங்கள் உட்பட பல அரச நிறுவனங்கள் மீது கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை இணையத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் அமைச்சரவை அலுவலகம் உட்பட 300 அரச நிறுவனங்களின் சுமார் 5 ஆயிரம் மின்னஞ்சல் முகவரிகளின் தரவுகள் காணாமற்போயுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கமைய இந்த இணையத் தாக்குதல்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

## அமெரிக்காவுக்கு ரணில் பயணம்

கொழும்பு, செப். 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபாவிலிருந்து நேற்று அதிகாலை அமெரிக்காவின் நியூயோர்க் நகரை சென்றடைந்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாளை முதல் 21ஆம் திகதி வரை நியூயோர்க்கில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். (ய)

## மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு;

# உண்டியல் பணத்தில் இந்தியா செல்வோம்

### கடற்றொழிலாளர் சங்கங்கள் வலியுறுத்து

> **அத்துமீறும் இந்திய றோலர் படகுகளால் வடக்கு மாகாண மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனினும் இது தொடர்பில் இதுவரை காத்திரமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.**

யாழ்ப்பாணம், செப். 18

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்து இந்தியத் தலைவர்களைச் சந்தித்து எடுத்துரைக்க செல்வதற்கான எமது கப்பல் பயணத்தை தடுத்தால் உண்டியல் குலுக்கி பணம் சேகரித்து விமானத்தில் தமிழ்நாடு செல்வோம் - இவ்வாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர் ஸ்ரீகந்தவேள் புனிதப் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சரை வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடிய பின் ஊடகங்களுக்குத் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அத்துமீறும் இந்திய றோலர் படகுகளால் வடக்கு மாகாண மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனினும் இது தொடர்பில் இதுவரை காத்திரமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்தநிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுதலைவர் அண்ணாமலை, தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரை நாம் நேரடியாகச் சந்தித்துப் பேசவுள்ளோம். அதற்கு இந்தியா நோக்கி கப்பல் பயணம் மேற்கொள்ளவுள்ளோம்.

எமது பயணம் கடற்படையினரால் தடுக்கப்படுமாயின் உண்டியல் மூலம் பணம் சேர்த்து விமானத்தில் தமிழ்நாடு செல்வோம் - என்றார். (ச-20-27)

## உள்நாட்டு உற்பத்தி

# இந்த வருடத்தில் 3.1 வீதம் வீழ்ச்சி

கொழும்பு, செப். 18

இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த ஆண்டைவிட 3.1 சதவீதம் குறைந்துள்ளது என்று தொகைமதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் கைத்தொழில்துறையில் 11.5 சதவீதமும் சேவை துறையில் 0.8 சதவீதமும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வேளாண்மை துறையில் 3.6 சதவீத வளர்ச்சி பதிவாகியுள்ளது. நிதித்துறை 18.8 சதவீதமும், தகவல் தொழில்நுட்ப சேவைகள் 8.5 சதவீதமும், தொலைத்தொடர்பு சேவைகள் 4.4 சதவீதமும், சுகாதார சேவைகள் 2.6 சதவீதமும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும் தொகைமதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
01 . 02 . 1947

மறைவு
17 . 09 . 2023

## சின்னத்தம்பி நவரத்தினம்

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்)

கப்பம்புலம் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், காளிகோயிலடி சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் (ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்) நேற்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் சரசுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினாம்பிகையின் பாசமிகு கணவரும், தர்சினி, கிருபானந்தன் (இ.மி.ச) துஷ்யந்தினி, திவாகரன் (கிருபா லேணர்ஸ்), தேனுகா (நோத் ஸ்ரார் பாமசி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சபீலா, நளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பவித்திரன், ஸகித்திரன், கஷ்விகா ஆகியோரின் நேசமிகு பேரனும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் திருநாவுக்கரசு (டென்மார்க்), கமலாதேவி, விவேகசிந்தாமணி, மகேந்திரராசா, தர்மலிங்கம் (சவுந்தன்), கலைவதனி, மதிவதனி ஆகியோரின் அருமைச் சகோதரரும், பூரணம், ஜெயலக்சுமி, காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் வில்வராசா, கௌசலாதேவி, வசந்தினி, துரைசிங்கம், கனகராசா, காலஞ்சென்ற சரசுலிங்கம் மற்றும் செல்வநாயகி, தசநாயகி (சுவிஸ்), ஸ்ரீதேவி, காலஞ் சென்ற கேசவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

மகன் - 077 340 9881



தென்மராட்சிப் பிரதேச அறநெறிப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு அறநெறி சார்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு வளவாளராக சிவசிறி கு. சுமுகலிங்கம் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். (ய-9)



பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் விசுவாசம் செல்வராசாவின் (பிரான்ஸ்) நெறிப்படுத்தலில் ஊர்காவற்றுறை பிரதேச பகுதியில் வசிக்கும் பொருண்மியம் நலிந்த 25 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக குடும்பம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (ய-20)



சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் அண்மையில் இடம்பெற்ற குங்குலியக்கலய நாயனார் குருபூசை நிகழ்வில் சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க.கயிலைவாசன் ஆற்றினார். மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாணவர்களுக்கு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ய)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதவிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழாகடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ய-9)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் விசேட வேலைத்திட்டத்தின் ஊடாக நெடுந்தீவு பிரதேசசபையின் பொது நூலகத்துக் கான ஒரு தொகுதி நூல்கள் கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலர் எவ். சி. சத்தியசோதியால் வழங்கப்பட்டன. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 வீதமான இளைஞர்கள் வெளிநாடு செல்லத் திட்டம்

## களனிப் பல்கலையின் ஆய்வில் தகவல்

கொழும்பு, செப். 18
நாட்டிலுள்ள 18 தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 80 சதவீதமானவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்புகின்றனர் என்று களனிப் பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வை மேற்கொள்ள 3 ஆயிரத்து 500 பேரின் கருத்துகள் பெறப்பட்டதுடன், 3 அளவுகோல்களின் கீழ் இதற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடு செல்வ தற்கான காரணம், வெளிநாடு செல்லக்கூடாது என்பதற்கான காரணம், வெளிநாட்டில் இருந்தால் மீண்டும் இந்த நாட்டுக்கு வருவதா? இல்லையா? என்ற அடிப்படைகளில் ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி, நாட்டிலிருந்து வெளியேற விரும்புபவர்களில் 75 சதவீதமானோர், தாம் வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்புவதற்கான பிரதான காரணங்களாக, அரசாங்கத்துக்கு எதிர்காலம் பற்றிய தெளிவான சிந்தனை இல்லை என்பதுடன், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட தேவைகளைப் பூர்த்திசெய்வதில் உள்ள சிரமம் மற்றும் அநாவசியமான வரிவிதிப்பு என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டிலிருந்து வெளியேற விரும்பாதவர்கள், தமது பெற்றோரைக் கவனித்து கொள்ளுதல், பிள்ளைகளை வெளிநாட்டில் வளர்க்க விரும்பாமை மற்றும் நாட்டின் மீதுள்ள பற்று போன்ற காரணங்களை முன்வைத்துள்ளனர். (ம-ய)

### வேலையாட்கள் தேவை

யாழ். திருநெல்வேலி பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலுள்ள கட்டடமொன்றின் திருத்த வேலைக்கு மேசன், உதவியாளர் மற்றும் மின்னியல்வேலை பிளம்பிங் தெரிந்தவர்கள் தேவை

தொடர்பு : 077 9530 496

## சுயதொழில் முயற்சிக்கடன்

சாவகச்சேரி, செப். 18
சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பத்து அங்கத்தவர்களுக்கு கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுழற்சி முறைக்கடனாக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கையளிக்கப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனத்தால் சங்கத்துக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி, அங்கத்தவர்களுக்கு சுயதொழில் உதவிக் கடனாக வழங்கி தவணை தவறாமல் மீளச் செலுத்தியதையடுத்து மேலும் பத்து அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறைக்கடனா கக் கடந்த வெள்ளிக்கிழமை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்ட புத்தகம் கையளிக்கப்பட்டது.

சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்தி நாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் கலந்துகொண்டு வங்கிப் புத்தகங்களைக் கையளித்தார். (ய-9)

இலங்கையைச் சுருட்டி

## ஆசியக்கிண்ணத்தை வென்றது இந்தியா

கொழும்பு, செப். 18
ஆசியக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் 50 ஓட்டங்களுக்குள் சுருட்டி அபார வெற்றியைப் பெற்றது இந்தியா.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான இறுதி ஆட்டம் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆட்டம் ஆரம்பம் முதல் இந்திய பந்துவீச்சாளர்களில் ஆதிக்கத்தால் இலங்கை அணி வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

குசல் பெரேரா, சதீர சமரவிக்ரம, சரித் அசலங்க, தசுன் ஜானக்க, மதீஸ பத்திரண ஆகியோர் ஓட்டங்கள் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர். ஏனைய வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க இலங்கை அணி 50 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இந்திய அணி சார்பில் மொஹமட் சிராஜ் 6 இலக்குகளையும், ஹர்த்திக் பாண்டியா 3 இலக்குகளையும் கைப்பற்றி இந்திய அணிக்கு வலுச் சேர்த்தனர்.

51 ஓட்டங்கள் என்ற மிக இலகுவான இலக்கை நோக்கிப் பதிலளித்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆட்டமிழப்பு எதுவும் இன்றி 6.1 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றியிலக்கைக் கடந்தது.

இஸான் கிஷான் 23 ஓட்டங்களையும் சுப்மன் கில் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (அ-ஒ-இ)




### பெறுகைகளுக்கான அறிவித்தல்
### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
### வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை - 2023 / 2024

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2023/ 01 தொடக்கம் 10வரை | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம் , பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (ஆ)தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திர சிகிச்சை கூடம், பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (இ).சாவகச்சேரி , ஊர்காவற்றுறை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில். | 3000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
 அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
 ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
 இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்குத் தகமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப் பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 0212223725, 0212226253, 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம்முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமிழ் மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 06 ஒக்டோபர் 2023 ஆம் திகதி வரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கை யுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 09 ஆம் திகதி ஒக்டோபர் 2023 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 03 ஆம் திகதி ஒக்டோபர் 2023 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது ஏந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-[illegible]**
**மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail .com**

(cr.40577) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவேந்தலை...

கின்றேன் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இருவேறு இடங்களில் வைத்து தியாகதீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீதும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மீதும் சிங்களக் காடையர்கள் பொலிஸார் முன்னிலையில் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தியாகதீபம்திலீபனின்நினைவுத்தூபிக்கு அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலியை அகற்றுவதற்கான முயற்சிகள் ஒருபுறம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, பாதுகாப்பு வேலிக்கு நிதி ஒதுக்கப்பட்டமையை தவறு என்று நிரூபிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மறுபுறம் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்களை முன்னெடுப்பதால் பொதுஅமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்று பொலிஸார் காரணங்களை முன்வைப்பதற்கு ஏதுவாக சிங்களக் காடையர்களை ஏவிவிட்டு நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நடந்தால் இவ்வாறான அமைதியின்மை ஏற்படும் என்பதை நீதிமன்றத்துக்கு பொலிஸார் அறிக்கையிடுவதற்கு வசதியாகவே திருகோணமலையில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

காந்தி கூட செய்யத் துணியாத ஓர் அஹிம்சைப்போராட்டத்தை கண் முன்னே நடத்திக்காட்டி பாரத தேசத்தின் தோலுரித்தவன் தியாக தீபம் திலீபன். அஹிம்சாவாதியை நினைவுகூருவதற்கே இந்த நாட்டில் இடமில்லை. அஹிம்சைக்கு வன்முறையால் சிங்களக்காடையர்கள்பதிலளித்திருக்கின்றார்கள். தந்தை செல்வா அன்று அஹிம்சையால் போராடியபோது சிங்களக் காடையர்கள் தாக்கியதால்தான் ஒரு கட்டத்தில் தமிழர்கள் திருப்பித் தாக்கத் தொடங்கினார்கள் என்ற வரலாற்றை மறந்துவிட்டார்கள்போலும்.

சிறிலங்கா பொலிஸ் எப்போதும் பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் அடிவருடிகளாகவே இருக்கின்றது என்பதற்கு அவர்கள் கண்முன்னால் நடந்த தாக்குதல் மிகச் சிறந்த உதாரணம். பாதுகாக்கவேண்டிய பொலிஸாரே காடையர்களுக்கு ஒத்தாசை புரிந்தமையால் தான் இந்த நாட்டில் ஆயுதப்போராட்டம் முகிழ்ந்தது என்பதையும் மறந்துவிட்டார்கள்.


தேர்தல்வெற்றிக்காக சொந்தமக்களையே கொலைசெய்த கொடூரர்கள் ஆட்சியில், மீண்டும் இனவாதம் விதைக்கப்படுகின்றமை தெளிவாகத் தெரிகின்றது. தேர்தலுக்காக விதைக்கப்படும் இனவாதம் இலகுவில் அடங்காது. இந்த நாடு மீண்டும் ஒரு குருதிக் களரியை நோக்கியே செல்லப்போகின்றது என்பதற்கே கட்டியம்கூறுவதாகவே நேற்றைய சம்பவம் நடைபெற்றிருக்கின்றது - என்றுள்ளது. (அ-ஓ.5)

## தியாகதீபம்...

திருகோணமலை - கொழும்பு வீதியில், சர்தாபுர பகுதியில் இந்தக் கொலைவெறி தாக்குதல் நேற்று மாலை நடந்தது.

தியாகி திலீபனின் திருவுருப்படம் தாங்கிய ஊர்தி பொத்துவிலில் இருந்து பயணத்தை ஆரம்பித்து, வடக்கு நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. திருகோணமலை மூதூர், சேனையூர், தம்பலகாமம் பகுதிகள் ஊடாக திருகோணமலை நகரத்தை நோக்கி, திருகோணமலை - கொழும்பு வீதியில் நேற்றுப் பயணித்தது.

சர்தாபுர பகுதியில் சிங்கள காடையர்கள் கற்களை நடுவீதியில் போட்டு, வீதியை வழிமறித்திருந்தனர். அந்தப் பகுதியில் பொலிஸார், இராணுவப் புலனாய்வுத் துறையினரும் பிரசன்னமாகியிருந்த





னர். பொலிஸார் பார்த்துக்கொண்டு நிற்கத்தக்கதாக பெண்கள் உள்ளிட்ட காடையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

முதலில் முகத்தை கறுப்புத்துணியால் கட்டிய சிங்களக் காடையன் ஒருவன், பெரிய கல்லால் ஊர்தியை தாங்கி வந்த வாகனத்தை தாக்கியுள்ளான். தொடர்ந்து வாகனம் முன்னேறிய நிலையில், வீதியின் குறுக்கே தடைகளை ஏற்படுத்தி காத்திருந்த, ஆண்களும், பெண்களும் நிறைந்திருந்த காடையர் கூட்டம், வாகனத்தைச் சுற்றிவளைத்து, கொட்டன்களால் அடித்துத் தாக்கினர். கைகளில் வாளேந்திய சிங்கக் கொடியை வைத்திருந்து வாகனத்தில் இருந்தவர்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கினர். அங்கு கடமையிலிருந்த பொலிஸாரால் நிலைமையைக் கட்டுப்படுத்தவில்லை. இந்தக் கொலைவெறித் தாக்குதலில் இருந்து தப்பித்து, ஊர்தியைத் திருப்பி அருகிலுள்ள தம்பலகாமம் பகுதிக்கு கொண்டு சென்றுள்ளனர். தொடர்ந்து பயணிக்க முடியாத நிலையில், அங்கேயே தங்கியுள்ளனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை அமைப்பாளர்கள் உட்பட 8 பேர் காயமடைந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தாக்குதல் காரணமாக இறங்கிச் செல்ல முற்பட்டபோது அவரை விரட்டி விரட்டித் தாக்குதல் நடத்தினர். பொலிஸார் அதனைத் தடுக்காமல் பார்த்திருந்தனர். சிங்களப் பெண்மணி ஒருவர் "நீ தமிழா? தமிழா ?"எனக் கேட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளார். இது சிங்களவர்களின் பிரதேசம் என்று குறிப்பிட்டு இங்கே வரக் கூடாது எனவும் தெரிவித்துத் தாக்குதல் நடத்தியுள்ளார். (அ-ஓ-26-66)

## சூழ்ச்சித்...

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்பதற்காகத்தான் கோத்தாபய ராஜபக்சவை நாம் ஆட்சிக்கு கொண்டுவந்தோம். அவரால் ஆட்சியை நிர்வகிக்க முடியாமற்போய் விட்டது. இதுவிடயத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பான தகவல்களை ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும், வெளிப்படுத்துவோம். இவை தொடர்பான தகவல்கள் அரச இரகசியத்தகவல் பெட்டியில் உள்ளது.

கோத்தாபய ராஜபக்சவை எப்படி விரட்டினார்கள், அதன் பின்னணியில் செயற்பட்டது யார், ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் அது பற்றி நாம் கதைப்போம். கோத்தாபய ராஜபக்சவை விரட்டியதன் விளைவையே தற்போது மக்கள் அனுபவிக்கின்றனர் - என்றார். (அ-ஓ-44)

## பல்கலை...

தவறான முடிவு எடுத்திருந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது அவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியில் அண்மையில் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் தவறான முடிவு எடுத்து உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-214)

## கொடிகாமம்...

மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. அதேயிடத்தைச் சேர்ந்த துரைச்சாமி தெய்வேந்திரநாதன் (வயது-75) என்னும் வயோதிபரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமத்திலிருந்து கச்சாய் நோக்கி துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது ஒட்டங்கேணியால் தனது வீட்டுக்குச் செல்ல வலது பக்கமாகத் திரும்பியுள்ளார். எதிர்த்திசையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வயோதிபரை மோதியது.

விபத்தில் படுகாயமடைந்தவரை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோதும் நேற்று அதிகாலை அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஓ-26-100)

## இளையோரின்...

களுக்குச் செல்வதன் காரணமாக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

களனிப் பல்கலைக்கழக கலைப்பீட பேராசிரியர் பிரசாதினி கமகே உள்ளிட்ட ஆய்வுக் குழுவால் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட படித்தவர்கள் உணவகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள் போன்றவற்றில் பணிபுரிவதாக வெளிவிவகார அமைச்சு கூறுகிறது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் தமது தொழிலுக்கு ஏற்ற வேலைகளைத் தேடிக் கொள்ள முடியாமல், இவ்வாறான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஓ.இ)

## தந்தைக்கு...

மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிழந்த சிறுமியின் தந்தை கடந்த வருடம் கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் இடம்பெற்ற குற்றச் சம்பவமொன்றின் பிரதான சந்தேகநபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் கொழும்பு, கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் நபரொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடந்தபோது, அவருடன் அவரது மனைவியும் குழந்தையும் முச்சக்கரவண்டியில் பயணித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் நீதிமன்றத்துக்கு அருகில் முச்சக்கரவண்டியில் பயணித்த குழுவினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஆறு வயதுப் பெண் குழந்தை காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளது. (அ-ஓ.இ)

## சிங்களக்...

தோடு இந்தத் தாக்குதலை செய்ய தூண்டியவர்களுக்கும் தாக்குதலை நடத்திய காடையர்களுக்கும் உரிய தண்டனையையும் வழங்கவேண்டும்' என அவை கோரியுள்ளன. (அ-ஓ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரூ.50,000,000 லஞ்சம் அமைச்சர் பந்துல பெற்றார்!

## ரயில்சேவையைப் பாதுகாக்கும் அமைப்பு மீண்டும் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 18

**போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்திய நிறுவனம் ஒன்றிடம் இருந்து 5 கோடி ரூபாவை இலஞ்சமாகப் பெற்றார் என்று ரயில் சேவையைப் பாதுகாக்கும் அமைப்பினர் மீண்டும் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். தம்மிடம் அதற்கான ஆதாரங்கள் உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இந்திய தொடங்கொட தெரிவித்ததாவது:-

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் ஊடகத்துறை அமைச்சு உள்ள காரணத்தால் அவர் தனக்கு ஏற்றாற்போல் ஊடகங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார். அவருக்கு எதிராக நான் குறிப்பிட்ட விடயங்களுக்கு ஊடகங்கள் கவனம் செலுத்தக்கூடாது என அவர் ஊடகங்களுக்கு மறைமுகமாக அச்சுறுத்தல் விடுத்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அமைச்சர் பந்துல குணவர்த்தன எப்படிப்பட்டவர் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். அவர் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை முன் வைக்கவில்லை. சாட்சியங்களுடன்தான் குற்றச்சாட்டுகளை முன்வைத்தேன்.

எதிர்வரும் நாள்களில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்பேன்.

தனது அரசியல் அந்தஸ்தைப் பயன் படுத்தி தனது குடும்ப உறுப்பினர்கள் எவருக்கும் தொழில்வாய்ப்பு களைப் பெற்றுக்கொடுக்கவில்லை என அமைச்சர் பந்துல குணவர்த் தன குறிப்பிடுவது அடிப்படையற்றது. இவரது மூத்த மகன் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, ஊடகத்துறை அமைச்சின் தனிப்பட்ட செயலாளராகப் பதவி வகிக்கிறார். மகள் அமெரிக்காவிலுள்ள இலங்கைக்கான தூதரகத்தில் மூன்றாம் நிலை அதிகாரியாகவுள்ளார். இவ்வாறு மருமகன், மைத்துனன் என அனைவருக்கும் அரசாங்கத்தில் உயர் மட்டப் பதவிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவை பதவி நீக்க முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம்- என்றார். (ம)

# அரசியல் தீர்வு விவகாரத்துக்கு திமோர் முறையே பொருத்தம்

## காணாமலாக்கப்பட்டோரின் சங்கம்

## ஐ.நா.விடம் பகிரங்கக் கோரிக்கை

வவுனியா, செப். 18

தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக, இலங்கை யின் வடக்கு- கிழக்கில் பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கு கிழக்குத் திமோரில் ஐ.நா. பயன்படுத்திய வழிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பின்பற்றவேண்டும் என்று காணாமலாக்கப்பட்டோரின் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின் கருத்துத் தெரிவிக்கையில் அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

1987ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசமைப்பில் உட்புகுத்தப்பட்ட 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே நாம் கோருகிறோம். 13ஆவது திருத்தம் நாட்டின் சட்டமாகும். அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்த மறுத்தால் தமிழ் அரசியல்வாதிகள் நீதிமன்றத்தை நாடவேண்டும்.

13ஆவது திருத்தம் என்பது தமிழர்களின் அரசியல் தீர்வோ அல்லது தமிழர்களுக்கு உதவுவதற்காகவோ அல்ல. இந்தியர்கள் இலங்கை மீது வைத்த பொறியே அது. இலங்கையிடம் 13ஆவது திருத்தத்தை இந்தியா அவர்களின் துரும்பாகப் பயன்படுத்துகிறது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கைத் தமிழ் மக்களே.

இதுதொடர்பில் இலங்கையின் வடக்கு-கிழக்கில் சுதந்திர வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ஐ.நா.வை நாம் கோருகிறோம். அதற்கு கிழக்குத் திமோரில் ஐ.நா. பயன்படுத்திய முறை மற்றும் வழிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பின்பற்ற வேண்டும்- என்றனர். (ச-110)


**விற்பனைக்கு**
தேங்காய் எண்ணெய் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டது)
மாப்பியன் மில்,சுதுமலை மானிப்பாய்.
077 772 2215

**சமையலாளர் தேவை**
மூன்று பேர் உள்ள குடும்பமொன்றிற்கு சமையலாளர் (பெண்) தேவை.
இடம்: தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்
(cs.52137) N.1
075 944 4601, 075 944 4609

**DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை**
* சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
* சகல நாடுகளுக்குமான பொதிகள் 5 - 7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
0777 55 45 28

**A/L வரலாறு**
யாழ். முதல் நிலை வரலாறு பாட ஆசிரியர்
M.பத்மன் [B.A(Hons) History Spl, P.G.D.E, M.A (Hons) History, M.Ed ]
கற்பிக்கும் இடங்கள்
• D.M.I யாழ்நகர் • BITSMANS மானிப்பாய் • உயர்கலைக்கல்லூரி குளப்பிட்டி
A/L 2023
A/L 2024
A/L 2025
A/L DAY CLASS
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(cs52133) (N.1)
தொடர்பு: 077 482 5587

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் நாவற்குழியில் **120 பரப்பு (நிலப்பரப்பு)** விற்பனைக்கு உண்டு.
* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை
தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389
(CS 26250)M-1




# மக்கள் ஆணையின்றி பதவியை ஏற்கேன்!

## சஜித் திட்டவட்டம்

கொழும்பு, செப். 18

மக்கள் ஆணை இல்லாமல் ஜனாதிபதி பதவியையோ அல்லது பிரதமர் பதவியையோ ஏற்பதற்கு நான் தயாரில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரமுனவின் 134 உறுப்பினர்களின் மட்டுப்படுத்தப்பட்ட ஆணையுடன் ஜனாதிபதி கதிரைக்குச் சென்ற தற்போதைய ஜனாதிபதி, பெரமுனவினர் என்ற திருடர்கள் குழுவின் பாதுகாவலராக மாறியுள்ளார்.

பூரண அரசாட்சியைத் தருவதாக கூறி னாலும் மக்கள் ஆணையின்றி ஜனாதிபதிப் பதவியையோ பிரதமர் பதவியையோ ஏனைய பதவியையோ அரச அதிகாரத்தையோ பெற நான் தயாரில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தினர்.

இதனால்தான் போராட்டத்துக்கு முன் நல்லிணக்கம் என்பது கடுமையான வார்த்தைப் பிரயோகமாக அமைந்து காணப்பட்டது - என்றார். (ம-44)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org